# பொதுக்காலம் 23ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இரண்டு, மூன்று பேர் என் பெயரின் பொருட்டு ஒன்றாக கூடியிருந்தால், அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என்பதை அனுபவித்து மகிழ, இன்றைய பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு வழிபாடு நம்மை அழைக்கிறது.

உடல்கள் பல்வேறுபட்டாலும் அனைவரின் உள்ளமும் ஒன்றையே எண்ணும் என்றால் அவ்வுள்ளங்கள் அனைத்தும் அன்பாலேயே இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய அன்பு நிறைந்திருக்கும் இடத்தில் ஐயமேயின்றி இறைவன் உறைகிறார் என்பதை மனதிற்கொள்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில், கடவுள் எசேக்கியலை இஸ்ரயேல் மக்களுக்கு காவலாளியாகவும், தவறை இடித்துரைக்கும் கடமையைச் செய்பவராகவும் நியமிக்கிறார். தீயோரின் தவற்றைச் சுட்டிக் காட்டி, எச்சரித்து, சரியான வழியைக் காட்டச் சொல்கிறார். அவ்வாறு நீ எச்சரிக்காவிடில், பாவம் உன்மேல் சுமத்தப்படும் என்கிறார். எசேக்கியலுக்கு மட்டுமல்ல, நமக்கும்தான்.

தீண்டாமை தவறுதான், பொறுத்துக் கொள்கிறோம்.

லஞ்சம் பாவம் தான், சகித்துக் கொள்கிறோம்.

இன்றைய சூழலில் தவறுகளை மனிதரைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. வலியவனுக்கு ஒரு நீதி; வக்கற்றவனுக்கு ஒரு நீதி என்பதில் மாற்றம் ஏற்பட நாமும் துணிவோம்.

இன்றைய நற்செய்தியில் பாவம் செய்யும் சகோதரை நல்வழிப்படுத்தும் செயலை சீடர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துரைக்கிறார் இயேசு. ‘தனித்திருக்கும் போது தவறைச் சுட்டிக் காட்டுங்கள்’ இதுவே எக்காலத்திற்கும் உகந்தது. நம் பெருமை பிறர் நாவால் பேசப்படட்டும். பிறர் தவறு நமக்குள்ளே அடங்கிப் போகட்டும். இதுவே மனித மாண்பு. ஆனால் பலரின் தவறுகள் முரசறையப்படுகிறது. பலரின் பெருமைகள் அறைக்குள்ளே சிறைப்படுத்தப்படுகிறது. தவறு செய்யாத மனிதனும் இல்லை; திருத்த முடியா தவறுகளும் இல்லை. இச்சிந்தனைகளை மனதிற் கொண்டு இப்பலியில் பங்கேற்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. திருச்சபையை அமைத்தவரே எம் இறைவா!

இத்திரு அவையை வழிநடத்த நீர் தேர்ந்தெடுத்த திருத்தந்தை, திருச்சபைப் பணியாளர்கள் அனைவரும் அன்புறவுப் பணியை செய்து, மக்களை விண்ணகப் பாதையில் நடப்பிக்க, தூய ஆவியின் வல்லமை பொழிந்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மக்களுக்கு காவலாளியாக எசேக்கியலை நியமித்தவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், பொறுப்பில் உள்ள அதிகாரிகள் ஏதேச்சாரப் போக்கையும், அதிகாரப் போக்கையும் கைவிட்டு, நாட்டு மக்களின் நலன்களுக்குத் தேவையான திட்டங்களைச் செயல்படுத்தவும், விலையேற்றத்தைக் குறைக்கத் தேவையான நடவடிக்கை எடுத்து, உண்மையான மக்கள் காவலாளியாக செயல்பட நல்லறிவு தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. “உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர்கள்” என்றவரே எம் இறைவா!

அன்பின் தேவையிலுள்ளோருக்கு எங்கள் நேரத்தையும், பொருள் தேவையிலுள்ளோருக்கு கொடுத்து உதவும் நல் மனதையும் நாங்கள் பெற்று பகிரவும், தவறுகளைத் தண்டிக்கும் தைரியத்தையும், அநீதிக்கு எதிராக குரல் எழுப்பவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை நோக்கி மன்றாடுகிறோம்.

4. விண்ணக கதவுகளைத் திறந்து ஆசீர்வதிப்பவரே எம் இறைவா!

எம் பகுதியில் பருவ மழை பொழிந்து, வேளாண்மை சிறக்கவும். குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி பெருகவும், மாணவர்களுக்கான எதிர்காலப் பாதை தெளிவாகவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உம் அருளால் பெற்றுக் கொள்ளவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com